DR. H. V. HANDE : It is a combined problem. Will the Government clarify why they have not declared this as a post-graduate qualification even though they do this training after graduation.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. மற்ற மாநிலங்களில் கொடுக்கப்படும் தகுதி இங்கே கொடுக்கப்படவில்லையென்றால், கொடுக்க வேண்டும் என்று அவர்களிடமிருந்து கோரிக்கை வந்தால் அதுபற்றி ஆலோசித்துத் தக்க முடிவு எடுக்கலாம்.

மல்லியத்திலுள்ள தனியார் உயர்நிலைப் பள்ளி

* 186 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா மல்லியத்தில் உள்ள தனியார் நடத்தும் உயர்நிலைப் பள்ளிக்கு 1969–70-ஆம் ஆண்டில் அரசு வழங்கிய மான்யத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மல்லியத்தில் மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளி இல்லை. ஆனால் அங்கு மானியம் பெறும் உயர் தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. அதற்கு 1969–70-ஆம் ஆண்டில் கிடைத்த மான்யம் ரூ. 11,742.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட பள்ளியினுடைய நிர்வாகம் சரியான முறையிலே நடைபெறவில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திருமயம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விளையாடுமிடம்

* 187 வினா—புலவர் பொ. பொன்னம்பலம : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்கள் தங்கட்கு விளையாட்டிடம் தேவை என்பது குறித்து 1969 டிசம்பர் திங்களில் அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் மனு அனுப்பியுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிக்கு அருகாமையிலுள்ள அரசாங்க புறம்போக்கு நிலத்தை, விளையாட்டிடத்திற்காக ஒப்படைக்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்பினார்கள். பள்ளிக் கல்வி இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

1970 செப்டம்பர் 2]

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணக்கர்கட்கு விளையாடுவதற்கு இடமும், விவசாயத்திற்கு இடமும் இல்லையென்ற குறை நீண்ட நெடுநாட்களாகவே இருந்து வருவதால் அந்தப் பள்ளிக்குப் பின்புறத்தில் உள்ள திடலை அந்தப் பள்ளி மாணவர்கள் விளையாடுகின்ற இடமாகவும், விவசாயத்திற்கான இடமாகவும் ஆக்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பக்கத்திலே உள்ள நிலம் ஒரு டிரஸ்டைச் சேர்ந்தது என்றும், டிரஸ்டினுடைய நிலம் என்பதைப்பற்றி சிவில் வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள். கல்வித் துறை அதிகாரிகள் அந்த டிரஸ்டோடு பேச்சு வார்த்தை நடத்தி அந்த நிலத்தைப் பெறுவதற்காகச் செய்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. வேறு நிலம் இருந்தால் அதைப் பயன்படுத்துவதற்கு முயற்சிகளை கல்வித் துறையினர் செய்துவருகிறார்கள். மாணவர்கள் அங்கேயுள்ள குளத்தின் கரையிலே விளையாடுகிறார்கள், கோடைகாலத்தில் குளத்தின் ஒரு பகுதியை விளையாடுமிடமாகப் பயன்படுத்துகிறார்கள். வேறு ஏதாவது நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் பக்கத்திலே இருக்குமாஞல் அதை ஒதுக்குவதிலே கடினம் இருக்காது. ஆனல் அந்த நிலம் டிரஸ்டுக்குச் சொந்தமாக இருப்பதால் அதைப்பற்றிய வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. வழக்கு முடிந்ததற்குப் பின்னல் அதைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மருத்துவ அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயது

* 188 வின—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு அரசாங்க டாக்டர் ஓய்வு பெறும் வயதை 58-ல் இருந்து 55 வயதாகக் குறைப்பது என முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் என்றல், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:(அ) & (இ) மருத்துவ அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 55-ஆகக் குறைத்து, 1968 ஜுனில் அரசு ஆணை பிறப்பித்தது. இவ்வாணையின்கீழ், குறிப்பிட்ட மருத்துவ அதிகாரிகளை பொது நலனை முன்னிட்டு ஊழியத்தில் மேலும் நீடித்து வைத்திருப்பது இன்றியமையாதது என்று கருதப்படுகிற நேர்வுகளில் 58 வயது வரை அவர்களைப் பணியில் நீட்டிக்க ஆண்டு தோறும் அனுமதி பெற்று அவர்கள் பணியில் நீட்டிக்கப்படலாம். அண்மையில், 1969 ஜுனில் இவ்வாணைகள் மாற்றியமைக்கப்பட்டன. அதன்படி, இன்றியமையாத நேர்வுகளில் பணி நீட்டிப்பு கொடுக்கப்படுவதற்குப் பதிலாக, பொதுநலனை முன்னிட்டு அவர்கள் 58 வயது வரை ஆண்டு தோறும் அப்பதவிகளில் மீண்டும் நியமிக்கப்படலாம்; ஓய்வு பெறும் வயது 55 என்னும் நிலை தொடர்ந்து நீடிக்கிறது.